மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

43—

மின்மாற்றி

***42141—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, லத்தூர் ஒன்றியம், சீகணாங்குப்பத்தில் (வேலூர்) உள்ள மின்மாற்றியையும் தேவைப்படும் இடங்களில் மின்கடத்திகளையும் மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், லத்தூர் ஒன்றியம், சீகணாங்குப்பத்தில் மின்னழுத்தக் குறைபாடு இருப்பதாகக் கூறியிருந்தார்கள். அது கண்டறியப்பட்டு, குறைவழுத்தத்திற்குக் காரணமான மின்பாதையில் மின்கம்பிகள் மாற்றப்பட்டு, புதிதாக ஒரு 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி அமைக்கப்பட்டு, தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மின்மாற்றியானது 15–11–2018 முதல் இயங்கி வருகிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், செய்யூர் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலுள்ள குறைபாடுகளை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சீவாடி, செம்புலிபுரம், நீலகண்டை, வள்ளிபுரம், அம்மனூர், நயினார்குப்பம் ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். சீவாடி*

2019 ஜூலை 5]

33 கே.வி.ஏ. துணை மின் நிலையத்திற்கு நிதி மற்றும் இடத்தை ஒதுக்கியும், இன்னும் அந்தப் பணி தொடங்க முடியாத ஒரு நிலையில் உள்ளது. அதேபோல் செம்புலிபுரம், நீலகண்டை பகுதிகளுக்கு துணை மின் நிலையம் அமைக்க proposal *அனுப்பி, அந்தப் பகுதிகளில் நிறைவேற்றக்கூடிய பணிகளும் இன்னும் தொடங்கப்படாத நிலையில் உள்ளன. அதேபோல் சின்னக்குப்பம் பகுதியில் உள்ள மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றித் தர பல்வேறு கோரிக்கைகள் வைத்தும், இன்னும் பணிகள் தொடங்காத நிலையில் உள்ளது. அதேபோல், சற்றேறக்குறைய 16 மீனவக் கிராமங்களைக் கொண்ட பகுதி செய்யூர் சட்டமன்றத் தொகுதி. அந்தப் பகுதிகளில் உள்ள மின் கடத்திகள் மற்றும் மின் கம்பிகள் அனைத்தும் அலுமினியத்தால் ஆனவை. அதாவது முழுவதுமாக அலுமினியத்தால் ஆனதால், உப்புக் காற்றின் தாக்கத்தினால் ஆங்காங்கே பல்வேறு நிலைகளில் பழுதடைந்து மின்னழுத்தக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதியில் மட்டும் 8 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. இன்னும் 4, 5 துணை மின் நிலையங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். எந்த அளவுக்கு மின் தேவை இருக்கின்றதோ, எந்த அளவுக்கு மின்னழுத்தம் இருக்கின்றதோ, அது கண்டறியப்பட்டு, தேவையான இடத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும். அதேபோல, கடற்கரைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், கடல் காற்றின் காரணமாகப் பழுது ஏற்படுகின்றது. அதனால், மின்னழுத்தக் குறைபாடு ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதைத்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் கேட்கின்றபோது சொன்னேன்; வெயில் அதிகமாக இருக்கின்றபோது, உப்புக் காற்றினால் மணலும், காற்றும் சேர்ந்து அடிக்கின்றபோது, அந்த* insulator*–ல் குப்பை படிகின்றபோது வெடித்துவிடுகின்றது. வெடித்தால் உடனே எங்களுக்குத் தெரிந்துவிடும். தெரிந்தவுடனே மாற்றிவிடுவோம். ஆனால்,* hairline

crack என்பதுபோல கீரல் வந்துவிட்டதென்றால் கண்டுபிடிப்பது சிரமமாகிவிடுகிறது. அதனால்தான் சிறிது காலதாமதமாகிவிடுகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதெல்லாம் கவனத்தில் கொள்ளப்படும். இப்பொழுது, படிப்படியாக insulators–ஐ polymer insulators–ஆக மாற்றியிருக்கின்றோம். பீங்கான் insulators–க்குப் பதிலாக polymer insulators–ஆக மாற்றியிருக்கின்றோம். அவ்வாறு மாற்றியமைத்துவிட்டதால் இதுபோன்ற பிரச்சினைகள் வராது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டிரான்ஸ்பார்மர் இருக்கிறது என்றும், அவற்றை இடம் மாற்றித் தர வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார்கள். அங்கே டிரான்ஸ்பார்மர் ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் அந்த இடத்தில் வேண்டாமென்றும், மாற்று இடத்தில் வைக்க வேண்டுமென்றும் சொன்னால் வேறு இடத்தில் எடுத்து வைப்பதற்கு அந்த ஊராட்சியில் பணம் கட்ட வேண்டும். அவ்வாறு பணம் கட்டுவதற்குத் தயாராக இருந்தால் மின்சார வாரியம் இடம் மாற்றி அமைத்துத் தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே அந்த மீனவக் கிராமங்களைச் சேர்ந்த பகுதிகளில் புதைவடத் தடம் அமைக்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்ற கோரிக்கையை வைக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.P.D.S. திட்டத்தின்கீழ் சற்றேறக்குறைய 40 இடங்களில் 25 கே.வி.ஏ. மின்மாற்றி அமைப்பதற்கான proposals உள்ளன. அதில் 8 இடங்களில் மின்மாற்றி அமைக்கும் பணி முடிந்த நிலையில், மீதமுள்ள பகுதிகளில் மின்மாற்றி அமைப்பதற்கான மின் பொருட்கள் இல்லையென்ற குறைபாடு நிலவுகிறது. அதேபோல கடப்பாக்கம், ஜி.டி. குப்பம், வடால் பகுதியை ஒட்டியுள்ள சேம்புலிபுரம் ஆகிய பகுதிகளில் 33 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைப்பதற்கும் பொருட்கள் இல்லையென்ற குறைபாடு நிலவுகிறது.

அதேபோல கருங்குழி, மதுராந்தகம் நகரம், கடப்பாக்கம் ஆகிய பகுதிகள் மதுராந்தகம் டிவிஷனில் இயங்கி வருகின்றன. செய்யூர் தாலுகா தலைநகரமாகவும், கிட்டத்தட்ட 17,000 மக்கள் வசிக்கக்கூடிய பகுதியாகவும் இருப்பதால், அந்த செய்யூர் பகுதிக்கென்று தனி டிவிஷன் அமைத்துத் தந்தால், அவ்வப்போது

2019 ஜூலை 5]

குறைந்த மின்னழுத்தத்தால் ஏற்படுகின்ற குறைபாடுகள் களையப்படும். ஏழையெளிய மக்கள் அதிகம் வசிக்கின்ற பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கை வைக்கின்றேன். கடந்த ஆண்டு 27–10–2018 அன்று இரும்பேடு என்ற எனது கிராமத்தைச் சேர்ந்தவர் மின் ஒப்பந்தப் பணியாளராகப் பணியாற்றிவந்த தங்கப்பிரகாசம். ஏழையெளிய, 27 வயது இளைஞர், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது மின்சார விபத்தின் காரணமாக வலது கையை இழந்துவிட்டார். அவருக்கு இதுவரை வேறு எந்தப் பணியோ, நிவாரண உதவியோ வழங்கப்படவில்லை. அவருக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்து என்னுடைய உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நிறைய கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். முதலில்* I.P.D.S. Scheme–*ல் துணை மின் நிலையம் அமைப்பதில் மின் பொருட்கள் இல்லையென்று சொன்னார்கள். அதுபோன்ற நிலை எங்கும் இல்லை. கிட்டத்தட்ட ஓராண்டுக் காலத்திற்காக இருந்த பொருட்களையெல்லாம் கஜா புயல் பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளுக்கு மாற்றிய காரணத்தால் சிறிது சுணக்கம் ஏற்பட்டது. இப்பொழுது பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 8 மின்மாற்றிகள் மாற்றப்பட்டிருப்பதாக நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். மின்மாற்றிகளும் இப்பொழுது தேவையான அளவுக்கு வந்துகொண்டிருக்கின்றன. விரைந்து அந்தப் பணிகள் முடிக்கப்படும். உங்களுக்காக முடிக்கிறோமோ இல்லையோ உரிய காலத்தில் பணி முடிக்கப்படாவிட்டால் மத்திய அரசு* subsidy *கொடுக்காமல் விட்டுவிடுகிறது. உரிய காலத்தில் அந்தப் பணி முடிக்கப்படவில்லையென்றால் அவர்கள் கொடுக்கின்ற மானியம் கடனாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதால் அப்பணியை விரைந்து முடிக்க வேண்டும். அதனால் அந்தப் பணியை விரைந்து முடித்துவிடுவோம்.*

கடற்கரை கிராமத்தில் புதைவடத் தடம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றீர்கள். அடிக்கடி புயலால் பாதிக்கப்படுகின்ற நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி, கடலூர் போன்ற

பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் புதைவடத் தடம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியையும் ஆய்வு செய்து தேவையிருப்பின் செய்கிறோம்.

மேலும், ஒப்பந்தப் பணியாளர் ஒருவர் விபத்துக்குள்ளாகிவிட்டார் என்றும் சொல்லியிருக்கின்றீர்கள். அவர் மின்சார வாரியத்தில் பணியாற்றும்போது அடிபட்டு கை இழந்திருந்தாரென்றால் உரிய நஷ்டஈடும், பணியும் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

முற்பகல் 10–35

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேளச்சேரி தொகுதியில் 179–வது வார்டில் 40 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட துணை மின் நிலையம் இயங்கிவருகிறது. ஏற்கெனவே ஒரு முறை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் குறிப்பிட்டிருக்கிறேன். அதைத்தான் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். மாநகராட்சியில் செல்வா நகர் என்ற இடத்தில் சொந்த இடமும் இருக்கிறது. அதை நீங்கள் பரிசீலனை செய்யவேண்டும். அதேபோல, வேளச்சேரியில், குறிப்பாக 177, 178, 179 மற்றும் 180 ஆகிய வார்டுகளிலுள்ள குறுகிய தெருக்களில் இருக்கும் உயர் மின் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தரமணி பகுதியில் 40 ஆண்டுகளாக வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது, சாலை வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், மின் இணைப்பு இன்னும் தரப்படவில்லை. மேற்கூறிய மூன்று கோரிக்கைகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 5]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, மாநகராட்சியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான இடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். மாநகராட்சி இடம் கொடுப்பதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கின்றதா என்பது பற்றி தெரியவில்லை. உடனடியாக அதை ஆய்வு செய்து, அவ்வாறு இடம் கிடைத்தால், விரைந்து துணை மின் நிலையம் அமைக்கப்படும். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், அதுவும் தென் சென்னை பகுதி வளர்ந்து வருகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அங்கேதான் அடிக்கடி இதுபோன்ற இடப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இடம் கிடைத்தால், உடனடியாக துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தரமணி பகுதியில் தண்ணீர் வசதி இருக்கின்றது, சாலை வசதி இருக்கின்றது. ஆனால், மின்சார வசதி இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை வைத்துப் பார்க்கும்போது, அந்த இடம் அரசு புறம்போக்காக இருக்கும் என்று நினைக்கின்றேன். இல்லையென்றால் அந்த இடம் ஓடைப் புறம்போக்காக இருக்கலாம். அப்படியிருந்தால்தான் மின் இணைப்பு கொடுக்காமல் இருந்திருப்பார்கள். எனினும், நாங்கள் வருவாய்த் துறையுடன் ஆலோசித்து அதற்குரிய நடவடிக்கையை எடுக்கிறோம். அதாவது, அந்த இடம் objectionable *புறம்போக்காக, அதாவது ஆட்சேபகரமான புறம்போக்கு நிலமாக இல்லாமல் இருந்தால், மின் இணைப்பு கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோன்று, வேளச்சேரியிலுள்ள 177, 178, 179 மற்றும் 180 ஆகிய வார்டுகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதுகுறித்தும் உடனடியாக ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு*